# மட்டக்களப்பு, வந்தாறுமூலை கிராமத்தின் சமூக குழுமங்களின் கலைப்பாரம்பரியங்கள்

LIBRARY
16 AUG 2012
Eastern University, Sri Lanka.

செல்வி. திலகரூபி பாலரட்ணம்
சுட்டெண் : **CS 2662**
பதிவிலக்கம் : **EU/IS/2005/AC/168**

FAC85
Project Report
Library - EUSL

85

நுண்கலைத் துறை
கலை கலாசாரப் பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம்
வந்தாறுமூலை,
இலங்கை.
2011

PROCESSED
Main Library, EUSL

# முன்னுரை

## ஆய்வுத்தலைப்பு

மட்டக்களப்பு வந்தாறுமூலைக்கிராம சமூகக்குழுமங்களின் கலைப்பாரம்பரியங்கள் என்பது இவ்வாய்வுக் கட்டுரையின் தலைப்பாகும். இவ்வாய்வுக் கட்டுரை வந்தாறுமூலைக் கிராமத்தின் பாரம்பரிய கலை, கலாசாரங்களை எடுத்துக் காட்டி அவைகளை தொகுத்துக் கூறும் ஒரு தொகுப்பாகவே அமைந்துள்ளது.

## ஆய்வுக்கான காரணங்கள்

வந்தாறுமூலை சமூகமானது கலைகளினை வளர்த்தெடுப்பதில் சிறப்பான ஓர் இடத்தினைப் பெற்றிருந்தது. எவ்வாறாயினும் இதுவரை காலமும் இச் சமூகம் சார்ந்தும்,கலைகள் சார்ந்த முயற்ச்சி பற்றிய தொகுப்பு முறையிலான ஆய்வுக் கட்டுரைகள் எதுவும் பெரிதளவில் வெளிவராமை.

இக்கட்டுரையினூடாக வந்தாறுமூலைக்கிராம மக்களின் பாரம்பரிய பண்பாட்டு அம்சங்கள் வெளிக்கொண்டு வருதல்.

பாரம்பரிய கலை. கலாசாரங்கள் பற்றிய ஆய்வினை மேற்கொள்ளும் ஏனைய ஆய்வாளர்களுக்கான தகவல்களைத் தருதல்

ஆய்வாளர் வந்தாறுமூலைக் கிராமத்தை தாயின் பரம்பரை அடிவழியாகக் கொண்டவர் என்பதனால் இப்பகுதி கலை, கலாசார வடிவங்கள், சமூக நிலை போன்றவற்றினை பங்குபற்றல் முறை மூலம் பெற்றுக்கொள்ளுதல்..

.இங்குள்ள மூத்த தலைமுறையினரிடம், அண்ணாவியார்கள், கலைஞர்கள், மூத்த ஆலய பரிபாலண சபையைச் சேர்ந்தவர்கள், பூசாரிகள் போன்றவரிடம் பெற்ற தகவல்களும் இவ்வாய்வுக் கட்டுரைக்கான பிரதான மூலங்களாக அமைகின்றது. துணை மூலங்களாக இக்கலை, கலாச்சார வடிவங்கள் பற்றிய இது வரை வெளிவந்துள்ள சஞ்சிகைகள் எழுத்தில் அமைந்த கூத்துக்கள், என்பன அமைகின்றது.

## ஆய்விற்குரிய மூலங்கள்

வந்தாறுமூலை புராதன ஆலயங்களான கண்ணகியம்மன் ஆலயம், நிர்முகப்பிள்ளையார் ஆலயம், மகாவிஷ்னு ஆலயம், மருங்கையடி பிள்ளையார் ஆலயம் போன்ற ஆலயங்களில் இருந்து பெறப்பட்ட தரவுகள்.

இக்கிராமத்தில் உள்ள அனைத்து சாதிகளைச்சேர்ந்த, மூத்ததலைமுறையினரை நேரில் சந்தித்து பேட்டி காணல்.

ஏறாவூர் பிரதேச செயலகத்தின் மூலமாக பெறப்பட்ட தகவல்கள்.

## வரையறைகள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர் பிரதேசசெயளாளர் பிரிவிலுள்ள வந்தாறுமூலை கிராமத்தில் உள்ள நான்கு கிராமஙகளிலும் உள்ள பாரம்பரிய கலைகள் பற்றிய தரவுகள் முழுமையாக கொடுக்க முடியாத விடத்து, இக் கிராமத்தின் கிழக்கு, மேற்கு பகுதியில் நிகழ்தப்படுகின்ற பாரம்பரிய கலைகள் பற்றிய தரவுகள் பெரும்பாலும் முழுமையாக இங்கு குறிப்பிடப்படுகின்றது.

## ஆய்வுப் பகுப்பு

இவ் ஆய்வானது ஐந்து பிரதான அத்தியாயங்களாக வகுக்கப்பட்டுள்ளது. முதலாவது அத்தியாயத்திலே மட்டக்களப்பின் வந்தாறுமூலைக் கிராமத்தின் அறிமுகத்துடன் இக்கிராமத்தின் புவியியல், கலாசார அம்சங்களும், வந்தாறுமூலைக் கிராம மக்களது வாழ்வியல் அம்சங்களும், வந்தாறுமூலைக் கிராமத்தின் தொழில் பண்பாடுகளுடன் அமைந்த சாதியமைப்பு, இயல்பு வாழ்க்கை, கலாசார வடிவங்கள், கலையுணர்வு என்பன ஆராயப்பட்டுள்ளன.

இரண்டாம் அத்தியாயத்திலே வந்தாறுமூலைக் கிராமத்தில் பாரம்பரியமாக காணப்பட்ட கலை வடிவங்கள் வடிவங்கள் பற்றிய அறிமுகம்.

மூன்றாவது அத்தியாயத்தில் இக் கிராமத்திற்குரிய தனித்துவம் பொருந்திய நொண்டிக்கூத்து.

நான்காவது அத்தியாயத்தில் வந்தாறுமூலைகிராமத்தில் 1962ஆம் ஆண்டுவரை பாரம்பரியநிகழ்த்துகையாக இடம்பெற்ற புலிக்கூத்து அல்லது புலிஆட்டம் பற்றிய ஓர் நோக்கு

ஐந்தாவது அத்தியாயத்திலே முடிவுரை அமைந்து காணப்படுகின்றது. இதில் வந்தாறுமூலைக் கிராமத்தின் பாரம்பரிய கலை, கலாச்சாரங்களின் தனித்துவம் எடுத்து விளக்கப்பட்டுள்ளது.

பின்னிணைப்பில் கள ஆய்வின் போது பேட்டி கண்டோர் விபரம், ஆய்வில் பயன்பட்ட நூல்கள், கட்டுரைகளின்விபரம், புகைப்படங்கள், எழுத்துருக்கள் போன்றவை இடம்பெற்றுள்ளன.

பொருளடக்கம்


நன்றியுரை III

முன்னுரை IV-VI

இயல் ஒன்று-01 1 - 2

மட்டக்களப்பு வந்தாறுமூலை கிராமத்தின் வரலாறும்,சமூகஅமைப்பும்1 - 35

1.1 வந்தாறுமூலை கிராமம்பற்றிய அறிமுகம் 3 - 13

1.2 வந்தாறுமூலை கிராமத்தின் சமூகஅமைப்பு முறைகள் 14 - 23

1.3 வந்தாறுமூலை கிராமத்தின் இயல்புவாழ்க்கை முறையும், கலையுணர்வும் 23 - 35

இயல் இரண்டு -02 37 - 37

வந்தாறுமூலைசமூகத்தில் காணப்படுகின்ற, பாரம்பரிய நிகழ்த்துகைகளாக இடம்பெற்று வருகின்றதுமான கலைவடிவங்கள்.38 - 39

2.1கொம்புமுறி விளையாட்டு 40 - 43

2.2வசந்தன் கூத்து 43 - 50

2.3கும்மி 50 - 51

2.4காவடி 52 - 54

2.5வடமோடி,தென்மோடி கூத்து 54 - 59

2.6மகிடிக் கூத்து 60 - 61

2.7வேட்டைத்திருவிழா 61 - 62

இயல் மூன்று-03

3.1நொண்டிக்கூத்து அல்லது நொண்டிஆட்டம் 66 - 80

இயல் நான்கு-04

4.1 புலிக்கூத்து அல்லது புலிஆட்டம் 84 - 106

இயல் ஐந்து-05

5.1 முடிவுரை 109 - 110

5.2 ஊசாத்துணை நுல்கள் 111 - 112

5.3 களம் கண்டோர் விபரம் 113 - 114

5.4 புகைப்படங்கள் 115 - 127